அசல்

5.1.1917. பொ. மாணிக்கம்.

அசல் -1 நகல் -1

உ

சிவமயம்.

சன்மார்க்க சங்கம்

பொ. மாணிக்கம்,
காரியதரிசி,

(திருச்சி ஜில்லா.)

தாதம்பேட்டைப்பழூர்,
5-1-1917.

ஒழுகலன்பும் விழுமிய [illegible] வாய்ந்த
ஐயரவர்களினது திவ்ய திருவடித்தாமரை
களுக்கு

தாதம்பேட்டைப்பழூர் சன்மார்க்க
சபையார் அநேக கோடி நமஸ்காரம்.
அவாடத்திய தண்ணளியார்ந்த 2-1-17ம்
தேதி திருமுகம் கிடைத்து மிகப் பெருமகிழ்
வெய்தினேம். வருஷோத்ஸவ ஸம்பந்த
மாகச் செய்யப்பெற்றிருந்த ஏற்பாடு
களும் பிறவும் நன்கமைந்திருந்ததாயினும்,
தாங்கள் இன்மையால் கல்விப்பயனற்றது
இதுவேமாதலின் அதன் பெருமையால்
அவைகள் நிகழ்ந்தனவாகும். தவறுகள்
நேர்ந்திருந்தனவாயின் அவைகள்
எங்கள் அறியாமையால் நடந்தனவாம்.
பெருமானே! இறையோனாகிய எங்கள்
ஒவ்வொன்றுக்கொட்டும் இணங்கி நடவையா
மேற்பட்ட தெய்வத்தையும் கருதாது
பேரன்புடன் சிவன் காரியஞ் செய்து
ஞானயாகம் வளர்த்து அறிவு கொளுத்தி
யருளிய பெருங்கருணைத் திறத்தை
யென்னென்றுரைப்போம். சுவாமிகாள்!
எல்லா நலனும் நிறைந்த தங்கட்கு
யாங்கள் செய்யத்தகும் கைம்மாறு
யாதொன்றுங் காணப் பெறாமையால்

அசல்

5.1.1917. பொ. மாணிக்கம்.

அசல் -1 நகல் -1

உ
சிவமயம்.

சன்மார்க்க சபை.

பொ. மாணிக்கம்,
காரியதரிசி,

தாதம்பேட்டைப்பழூர்,
5-1-1917.

(திருச்சி ஜில்லா.)

எங்களினது ஆழ்ந்த அன்பை தேவரீர் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேம். தங்கள் ஆசீர்வாதத்தையும் இறைவன் திருவருளையும் துணையாகக் கொண்டு ஸ்ரீ கோவந்தபுத்தூர் கைங்கரியத்தில் இயன்றதைச் செய்யவும், செய்விக்கவும் முயல்வோம். சுபம்.

இணையாஜ்ஞாகாரக
அடிமை,
பொ. மாணிக்கம்.
காரியதரிசி

அசல்

5.1.1917. பொ. மாணிக்கம்.

அசல் -1 நகல் -1

நகல்

உ

பொ. மாணிக்கம் பிள்ளை
காரியதரிசி

தாதம்பேட்டை
பதி 5-1-1917

சன்மார்க்க சபை
திருச்சி ஜில்லா.

உலகெல்லாம் விரும்பிய சீலம் வாய்ந்த ஐயாவர்களது திவ்ய திருவடித் தாமரைகளுக்கு

தாதம்பேட்டைப் பதி சன்மார்க்க சபையார் அனேக கோடி நமஸ்காரம். அவ்விடத்திய தண்ணளியார்ந்த 2-1-17ந் தேதி திருமுகங் கிடைத்து மெய்ப்பெருமகிழ்வெய்தினேம். வருடோத்ஸவ சம்பந்தமாகச் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளும் யாவும் நன்கனைய திருந்ததுமன்றி, தாங்கள் இளமையிற் கல்வி பயின்றது இத்தேசமாதலின் அதன் பெருமையால் அவைகள் நிகழ்ந்தனவாகும். தவறுகள் நேர்ந்திருந்தனவாயின் அவைகள் எங்களறியாமையால் நடந்தனவாகும்.

பெருமானே! சிறியோமாகிய எங்கள் வேண்டுகோட்கிணங்கி நடையிலேற்பட்ட தேக சிரமத்தையுங் கருதாது பேரன்புடன் இவண் விஜயஞ் செய்து சபாநாயகம் வகித்து அறிவு சொரிந்தியருளிய பெருங் கருணைத் திறத்தை யென்னென்றுரைப்போம். சுவாமிகாள்! எல்லாநலனு நிறைந்த தங்கட்கு யாங்கள் செய்யத்தகுங் கைம்மாறு பிறிதொன்றுங் காணாப் பெருமையால் எங்களது ஆழ்ந்த அன்பை தேவரீர் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேம். தங்கள் ஆசீர்வாதத்தையும் இறைவன் திருவருளையும் துணையாகக் கொண்டு ஸ்ரீசோ ஸந்தபுத்தார் காரியத்தில் இயன்றதைச் செய்யவும் செய்விக்கவும் முயல்வோம்

சபையாருக்காக
அடிமை
பொ. மாணிக்கம்
காரியதரிசி

நகல்

172

5-1-1917

[illegible]
[illegible] பேட்டை
[illegible]

64

சு.கூ. vol IV.
p – 166 – 167

(12)